(5) அரசினர் தீர்மானம்.

விதி 41 (3) ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடைமுறை விதி 41 (3) இன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்குக் கொண்டுவரக் கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

6. கவன ஈர்ப்புகள்.

(அ) கிழக்கு முகவை மாவட்ட நிலவள வங்கிகள் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க வேண்டிய அவசியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று பேரவையின் 41 வது விதியின் கீழ் 9 அறிவிப்புகள் வைக்கப்பட உள்ளன. சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட வேண்டிய அவசியத்தை முன்னிட்டு, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கான அறிக்கைகள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் மேசை மீதும், பேரவைத் துறை நூலகத்திலும் வைக்கப்பட்டுள்ளன. பத்திரிகைகளுக்கும் அவை அளிக்கப்படும். எனவே, அந்த அறிக்கைகளைப் படித்ததாக அவை ஏற்றுக் கொள்ளும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தேவை என்று கருதினால் ஒரு விளக்கம் கேட்கலாம்.

முதலாவது திருவாளர்கள் கூத்தகுடி சு. சண்முகம், செ. சிவசாமி ஆகியோர் கொடுத்திருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானம்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, பிற்பட்ட பகுதியாகிய கிழக்கு முகவை மாவட்டத்தில் உள்ள நிலவள வங்கிகள் யாவும் கடன்கொடுக்கும் சக்தியை இழந்திருக்கின்றன. விவசாயிகளிடத்தில் பதட்ட நிலைமை ஏற்பட்டுள்ளது. கடன் கொடுக்கப்படாததால் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த நிலைமையை மாற்றி உடனடியாக வங்கிகள் மூலம் கடன் கொடுக்க வேண்டுமென்ற அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, கிழக்கு முகவை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் வளர்ச்சிக் கடன் தேவையை 12 பிரதம நிலவள வங்கிகள் பூர்த்தி செய்து